[12th September 1959

வேற்ற முடியாமல் இருக்கிறது. ஆகவே இப்போதுள்ள வருமானத்தின் அடிப்படையில் இதை திருத்தி அமைக்கவேண்டும் என்று கலெக்ட்டர் அவர்களிடமிருந்து ஏதாவது ரிபோர்ட் வந்திருக்கிறதா ? அப்படியென்முல் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : அதுபோன்ற ரிப்போர்ட்டுகள் ஒன்றும் வந்திருப்பதாக தெரியவில்லே.

Municipal elections

*336 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1959-ல் நடந்த நகராட்சி மன்ற தேர்தல்களில் பதிவான வாக்குகள் எத்தனே?

(ஆ) அவற்றில் செல்லாதவை எத்தனே?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Total number of votes polled during the elections—

(1) to the Corporation of Madras	431,847
(2) to the municipal councils	1,320,751

(*b*) Number of invalid votes polled—

(1) elections to Corporation	9,636
(2) elections to municipality	27,368

* 337 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் நடந்த ஸ்தல ஸ்தாபன தேர்தல்களில் தேர்தல் முறை பற்றிய குறைபாடுகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அதன் விவரம் என்ன?

(ஆ) இதைப் பரிகரிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir. Certain minor defects like assigning symbols to unopposed candidates, omission of certain particulars regarding the period of recess, etc., in the notices published, not mentioning the names of the contesting candidates in the strict alphabetical order, etc., were brought to notice.

(*b*) Necessary instructions were issued for rectifying the defects.

SRI A. VEDARATHNAM : சமீபத்தில் சென்னேயில் நடந்த நகரசபைத் தேர்தலில் ஏராளமான கள்ள வோட்டுகள் பதிவான தாகக் கூறப்படுகிறதே ! அதுபற்றி அரசாங்கம் பரிசீலனே

12th September 1959]

செய்ததா? அந்த மாதிரி மீண்டும் நிகழாமல் இருக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: கள்ள வோட்டுக்கள் அரசாங்கத்திற்குத் தெரிந்து பதிவு செய்யப்படவில்லை. இது அரசாங்கத்திற்குத் தெரியாத் விதத்தில்தான் நடந்திருக்கிறது. இதற்குக் காரணமாக இருக்கக்கூடிய குற்றம் குறைகளை நீக்குவதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Jothi Timber and Tile Depot, Vellore

* 338 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 25—3—1959-ல் 997-ம் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி வடஆற்காடு மாவட்டம் வேலூர் ஜோதி மரத்தொட்டி சொந்தக்காரர் மீது போக்குவரத்துக்கு இடையூராக மரத் தொட்டி இருக்கிறதென்று போலிசார் தொடுத்த வழக்கு என்ன வாயிற்று?

(ஆ) அந்த வழக்கின் தீர்ப்பின் முழு விவரமும் மேசைமீது வைக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Sir, the case ended in acquittal.

(b) The partner of Jothi Timber and Tile Depot was charged before the Sub-Magistrate, Vellore, with having wilfully obstructed the free passage of traffic on the road by keeping logs of wood. The Magistrate held that it was not proved that the logs found in the road belonged to the accused, that there were other timber shops round about and that the logs did not have any marks or signs to show that they belonged to the accused. In the end the Magistrate found the accused not guilty of the charges under the Madras City Police Act and acquitted them under section 245 (1), Criminal Procedure Code.

SRI S. M. ANNAMALAI: இந்த மரங்கள் யாருடையவை என்று 'ப்ருவ்' செய்யப்படவில்லை என்று கனம் அமைச்சர் சொல்லுகிறார். இந்த மரங்கள் இன்னும் ரோடிலேயே இருக்கின்றன. பிரஸ்தாப தீர்ப்பில் கூட, அவை யாருடையவை என்று 'ப்ருவ்' செய்யப்படாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே இந்த மரங்களை ஏலம்போட சர்க்கார் முன்வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அந்த மரங்கள் யாருடையவை என்று ப்ருவ் செய்யப்படவில்லை என்று 'கனம் அமைச்சர்' கூறவில்லை. அவ்வாறு சப்-மாஜிஸ்டிரேட் கூறியிருக்கிறார். மேலும் மறுபடியும் கேஸ் போடப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. என்னிடம் மேற்கொண்டு தகவல் இல்லை.